2022 மே 6] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

காரணத்தினால், இந்த வழக்கை CBI–யிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் CBCID–யிடம்தான் ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, எங்களுக்கு இதில் உடன்பாடு இல்லை. இந்த வழக்கு முழுமையாக, நேர்மையாக நடைபெற வேண்டுமென்றால், CBI வசம் ஒப்படைத்தால்தான் இந்த வழக்கு நேர்மையாக நடத்தப்படும். குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை பெற்றுத் தர முடியும். ஆகவே, எங்களுடைய கோரிக்கையை ஏற்காத காரணத்தினால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்ன கேட்டீர்களோ, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.*

(ஆ) காவேரியின் உபரிநீரை நீரேற்றுமூலம் ஒகேனக்கல் வழியாக தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், விவசாயத்தையே நம்பியிருக்கிற, வறட்சியான, மிகவும் பின்தங்கிய மாவட்டம். தமிழ்நாட்டினுடைய சராசரி மழையளவு 987 மி.மீட்டர்; ஆனால், தருமபுரி மாவட்டத்தினுடைய ஆண்டு சராசரி மழையளவு 853 மி.மீட்டர். ஆக, மழையளவில் குறைந்த மாவட்டம்; பெரிய பாசனத் திட்டங்கள் இல்லாத மாவட்டம். அங்கே சுமார் 555 ஏரி, குளம், குட்டைகள் இருக்கின்றன. அதிக மழை பெய்யாத காலங்களில், இவை நிரம்ப இயலாத சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இங்கே பெரும் பாசனத் திட்டங்கள் இல்லாத காரணத்தினால், எல்லா விவசாயிகளும் மானாவாரிப் பயிர்களையே, குறிப்பாக ராகி, கம்பு, சோளம், சாமை உள்ளிட்ட பயிர்கள்; அதைத் தவிர உளுந்து போன்ற பயறு வகைகளைச் சாகுபடி செய்து வாழக்கூடிய பின்தங்கிய மாவட்டம். பெரிய பாசனத் திட்டங்கள் இல்லாத ஒரு மாவட்டமாக இருக்கின்றது. இங்கே இருக்கின்ற மொத்த விவசாயக் குடும்பங்கள் 2,10,300; இதில் 1,90,000 குடும்பங்கள், குறு சிறு, விவசாயிகள். இங்கே வேலையில்லை; எந்தத் தொழில்*

வசதியும் இல்லை. வேலையில்லாத காரணத்தினால் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ஒடிசா போன்ற மாநிலங்களுக்கு கல் உடைக்கச் செல்கிறார்கள். மேலும், அங்கேயிருக்கக்கூடிய பெண்கள் ஈரோடு, திருச்சி போன்ற மாவட்டங்களுக்கு 3 மாத காலத்திற்கு நெல் அறுவடை செய்வதற்கு செல்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்த காரணத்தினால்தான், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கிராமப்புறத்தில் பொருளாதார மேம்பாட்டிற்கு, குடும்ப வருவாய்க்கு மகளிர் சுய உதவிக் குழுக்களை 1989–ல் தொடங்கினார்கள்; இது வரலாறு.

ஆகவே, இப்படிப்பட்ட பின்தங்கிய மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு இன்றைக்கு முக்கியத் தேவை பாசனத் திட்டம். பாசனத் திட்டம் இல்லாத காரணத்தினால், காவேரி ஆற்றின் உபரி நீர் வீணாகக் கடலுக்குச் செல்கிறது. ஓராண்டில் 70 டி.எம்.சி., 110 டி.எம்.சி. அடி நீர் வீணாகக் கடலுக்கு சென்ற வரலாற்றை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில், ஒகேனக்கல் வழியாக காவேரியில் வீணாகச் செல்லும் உபரி நீரை நீரேற்றுமூலம் தருமபுரி மாவட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இது யாருக்கும் பாதிப்பு இல்லாத திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு சென்றிருக்கிறோம். அதைக் கனிவோடு கேட்டிருக்கிறார்கள். ஆகவே, இதனை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கையில் இருக்கின்றது. இது யாருக்கும் பாதிப்பில்லாத திட்டம். அதோடுமட்டுமல்லாமல், நீரேற்று முறையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதைப் புரிந்துகொண்டோம். Lift irrigation கேட்கிறீர்கள். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒகேனக்கல்–தருமபுரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நம்மிடம் அனுமதி இருக்கிறது. புதியதாக அனுமதி வாங்க வேண்டியதில்லை. வனத் துறையிடமிருந்து நிலத்தையும் கையகப்படுத்தத் தேவையில்லை, குழாய்கள் பதிக்கத் தேவையில்லை.

2022 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நிறைய கருத்தினைச் சொல்லிவிட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் நீங்களே சொல்லிவிட்டதாகச் சொல்லிவிடுவார்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தருமபுரி மாவட்ட மக்களின் நலன் குறித்த கனவுத் திட்டம். எனவே, மனமுவந்து இந்த வளர்ச்சித் திட்டத்தை, வாழ்வாதாரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு வந்து, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதில் எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. தருமபுரி மாவட்டம் வளமான ஆறுகளால் வளர்க்கப்படுகிற மாவட்டம் அல்ல. அம்மாவட்டத்தின் பெரும்பகுதியில் புஞ்சை நிலங்கள்தான் இருக்கின்றன.*

வளைந்து, வளைந்து ஓடுகிற ஆறுகள், அவற்றினால் வளர்க்கப்படுகிற நெல் வயல்கள், எங்கு பார்த்தாலும் சோலைகள், கரும்பு, வாழை போன்ற பணப் பயிர்களைப் பயிரிடுகிற பூமி அல்ல. வேர்க்கடலை, மொச்சைக்கொட்டை, காராமணி போன்றவைதான் அந்தப் பகுதியில் விளைகின்றன. எனவே, அவர்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதிலும் எங்கிருந்து கேட்கிறார்கள் என்றால், ஒகேனக்கல் பகுதியிலிருந்து தண்ணீரை pump *செய்து கொண்டுவந்து, பெண்ணாகரம் அருகில் இருக்கிற கொண்டையன்கோட்டை ஏரியை நிரப்ப வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த ஏரியில் தண்ணீரை நிரப்பினால், அங்கிருந்து மற்ற ஏரிகளுக்கு தண்ணீர் போய்விடும் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டம் நன்றாகத்தான் இருக்கிறது; செய்யலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் 'இதனால் யாருக்கும் எந்தப் பாதகமும் இல்லை' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்ல முடியாது.*

[திரு. துரைமுருகன்] [2022 மே 6

அவர்கள் சரபங்கா திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். ஆனால், தஞ்சை மற்றும் டெல்டா மாவட்ட விவசாயிகள் அதற்கு மிகப் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அங்குள்ள விவசாயிகள் அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டுமென்று எங்களிடம் மனுக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நானே ஒப்புக்கொள்கிறேன். அங்கிருப்பது மிகை நீர்தான். நான் இல்லையென்று சொல்லவில்லை. மிகை நீரை எடுப்பதற்குக்கூட அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். நாம், மிகை நீர் என்று சொல்கிறோம்; 'இல்லை, அது எங்கள் நீர்தான்' என்று அவர்கள் சொல்கிறார்கள்.

ஆகையினால், அவர்களை முதலில் நாம் சமாதானப்படுத்த வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இந்தத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய திட்டமல்ல. அவர்களையும் திருப்தியடையச் செய்து, செய்ய வேண்டிய ஒரு பணி இது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய யோசனையை, ஆணையைப் பெற்று, இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்த வேண்டுமோ, அவ்வாறு செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, அசோக் நிரஞ்ஜன் நகர் பகுதி, கழிவுநீர்த் தொட்டியில் விஷவாயு தாக்கி ஒருவர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள். விஷவாயு தாக்கியது குறித்து, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் வாலிபர் ஒருவர் கழிவுநீர்த் தொட்டியில் விஷவாயு தாக்கி உயிரிழந்தது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட*